# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 07 | கத்தோலிக்கத் திருமறை | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி - I

❖ **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. செபமாலையில் நாம் தியானிக்கும் மறையுண்மைகள் எத்தனை?
1. 20 2. 12 3. 10 4. 15

02. இயேசு எப்போது குருத்துவத்தை ஏற்படுத்தினார்
1. பெரியவெள்ளி 2. பெரிய வியாழன் 3. உயிர்த்த ஞாயிறு 4. புனித சனி

03. ஈசாக் என்பதன் பொருள் யாது?
1. சிரித்தல் 2. அன்பு செய்தல் 3. பொறுமை 4. மகிழ்ச்சி

04. புனித நாடு என அழைக்கப்படும் நாடு எது?
1. கிரேக்கம் 2. அமெரிக்கா 3. பலத்தீனா 4. சவூதி அரேபியா

05. இயேசுவின் சிலுவையைச் சுமப்பதற்கு உதவியவர் யார்?
1. யாக்கோபு 2. சீரேன் ஊர் சீமோன் 3. அந்திரேயா 4. வெரோணிக்கா

06. எசாயா என்பதன் பொருள் யாது?
1. இறைவன் உயர்த்தியுள்ளார் 2. இறைவன் மீட்கிறார்
3. ஆண்டவர் ஆற்றல் அளிப்பார் 4. இறைவன் நம்மோடு

07. திருப்புகழ்மாலை ஆராதனையில் அதிகமாக எந்த புத்தகத்திலுள்ள பாடல்கள் பாடப்படுகின்றன.
1. லூக்கா நற்செய்தி 2. யோவான் நற்செய்தி
3. திருப்பாடல் 4. விடுதலைப்பயணம்

08. நாமானின் தொழுநோயை குணமாக்கிய இறைவாக்கினர் யார்?
1. எலியா 2. எலிசா 3. நாத்தான் 4. பாகால்

09. திருமணத்தின் பண்புகள் எவை?
1. ஏழ்மை, கற்பு 2. ஒருமை, கட்டவிழாமை
3. கற்பு, கட்டவிழாமை 4. ஏழ்மை, ஒருமை

10. ஆபிரகாமின் அழைப்பின் இரு பிரிவுகளும் எவை?
1. நாடு, சந்ததி 2. இனம், ஆசி 3. தியாகம், சவால் 4. விண்மீன், நாடு

11. சிலுவைப்பாதையின் நிலைகள் எத்தனை?
1. 12 2. 16 3. 14 4. 15

LMDUnit

12. “என் ஆன்மா இறைவனையே ஏற்றிப் போற்றி மகிழ்கின்றது” என்ற பாடல் உள்ள நற்செய்தி எது?
1. புனித லூக்கா நற்செய்தி 2. புனித யோவான் நற்செய்தி
3. புனித மாற்கு நற்செய்தி 4. புனித மத்தேயு நற்செய்தி

13. பெந்தகொஸ்தே நிகழ்வின்போது மரியாவுடன் எத்தனை பேர் கூடி செபித்துக் கொண்டிருந்தனர்.
1. 150 2. 120 3. 165 4. 130

14. செபமாலைப் பக்தி முயற்சியை அறிமுகப்படுத்தியவர் யார்?
1. தூய டோமினிக் 2. பிரான்சிஸ் 3. திருத்தந்தை 5ம் பயஸ் 4. 16ம் பெனடிக்ற்

15. எலியா உண்மையான கடவுளை நிரூபித்த இடம் யாது?
1. சீனாய் மலை 2. ஒரேபு மலை 3. கார்மேல் மலை 4. கெனசரேத் மலை

16. ‘நான் யாரிடமாவது அநீதியாக எதையாவது வாங்கியிருந்தால் நான்கு மடங்காக திருப்பிக் கொடுக்கின்றேன்’ என்று கூறியவர் யார்?
1. சக்கேயு 2. மத்தேயு 3. பேதுரு 4. எசாயா

17. தூயஆவிக்கெதிராக பொய் சொல்லி மரணித்தவர்கள் யார்?
1. சக்கேயு, வெரோணிக்கா 2. அனனியா, சபிராள்
3. பேதுரு, சிசிலியம்மா 4. பெப்பத்துவா, பெலிசித்தா

18. இறந்த யூதாஸ் இஸ்காரியோத்திற்குப் பதிலாக தெரிவு செய்யப்பட்ட சீடர் யார்?
1. புனித மத்தேயு 2. மத்தியாஸ் 3. புனித ததேயு 4. புனித பிலிப்பு

19. ஆபிரகாமிற்கு வழங்கப்பட்ட சிறப்புப்பெயர் யாது?
1. மேன்மையான தந்தை 2. இனங்களின் தந்தை
3. விசுவாசத்தின் தந்தை 4. நாடுகளின் தந்தை

20. இறைவாக்கினர் எரேமியாவின் தந்தை பெயர்
1. பூசி 2. ஷில்தியா 3. கோமேஸ் 4. ஆமோஸ்

(40 புள்ளிகள்)

❖ **பொருத்தமான சொல்லைக்கொண்டு இடைவெளி நிரப்புக.**

**(திருத்தூதர்கள் / ஆண்டவரின் இல்லம் / சிலுவைப்பாதை / விருத்தசேதனம் / திருத்தந்தை தூய 2ம் யோண்பவுல்)**

1. பெத்தேல் என்பதன் பொருள் ....................................................... ஆகும்.
2. இயேசு பன்னிருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு ..................................... எனப் பெயரிட்டார்.
3. ஆண்டவர் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் வெளியடையாளம் ........................ ஆகும்.
4. கிறிஸ்துவின் திருப்பாடுகளையும், மரணத்தையும் நினைவு கூரும் பக்தி முயற்சி ............................ எனப்படும்.
5. ஒளியின் மறையுண்மைகளை அறிமுகப்படுத்தியவர் ............................................................. ஆவார்.

(10 புள்ளிகள்)

LMDMUnit

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. 1. ஈசாக்கின் பிள்ளைகள் யாவர்?
    2. சமூக நீதியின் இறைவாக்கினர் என அழைக்கப்பட்டவர் யார்?
    3. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் பற்றிக் கூறும் இரு நூல்கள் எவை?
    4. ஆபிரகாம் செய்த தியாகங்கள் 2 தருக.
    5. திருமுழுக்குச் சடங்கு பற்றி கூறும் நூல் எது? (5x2=10 புள்ளிகள்)

02. 1. திருயாத்திரை செல்வதன் நோக்கம் யாது?
    2. நீங்கள் அறிந்த திருத்தலங்கள் 3 குறிப்பிடுக?
    3. திருத்தலத்தினுள் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி 5 விடயங்களைக் குறிப்பிடுக. (2+3+5 =10 புள்ளிகள்)

03. 1. திருமணித்தியாலம் நடத்த வேண்டிய சந்தர்ப்பம் 2 தருக.
    2. திருமணித்தியாலம் நடத்துவதன் நோக்கம் 3 தருக.
    3. திருமணித்தியாலத்தின் ஒழுங்குமுறையை பட்டியற்படுத்துக. (2+3+5 =10 புள்ளிகள்)

04. 1. நவநாள் என்ற சொல் எவ்வாறு தோற்றம் பெற்றது. அதன் அர்த்தம் யாது?
    2. ஆலயத்திருவிழா கொண்டாடுவதற்கான காரணங்கள் 3 தருக.
    3. திருவிழாக் காலங்களில் ஆன்மீக வரங்களைப் பெற்றுக்கொள்ள நீர் செய்ய வேண்டியவை எவை? (2+3+5 =10 புள்ளிகள்)

05. 1. குருத்துவத்தின் இரு பிரிவுகளும் எவை?
    2. உமது பங்கிலுள்ள பொதுக் குருத்துவத்தின் ஒன்றியங்கள் 3 தருக.
    3. பொதுக் குருத்துவத்தில் உம்மால் ஆற்றக்கூடிய பணிகள் 5 தருக. (2+3+5 =10 புள்ளிகள்)

06. 1. பிதாபிதாக்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
    2. ஆபிரகாம் முகம் கொடுத்த சவால்கள் 3 தருக.
    3. ஆபிரகாமின் அழைப்பிலிருந்து நீர் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகைப் பண்புகள் 5 குறிப்பிடுக. (2+3+5 =10 புள்ளிகள்)

LMDMUnit